பக்கங்கள் 19+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 09 புதன்கிழமை 26.11.2025 | அதிர்வு 119

## தாந்தாமலை தொல்லியல் பதாகை அகற்றல் வழக்கு: கைதானவர்களுக்குப் பிணை

மட்டக்களப்பு, மண்முனை தென் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட தாந்தாமலை பகுதியில் நடப்பட்டிருந்த தொல்லியல் திணைக்களத்தின் பதாகைகளை 03


'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# தமிழ் இனத்தின் இறைவன் மேதகு

## நாடாளுமன்றத்தில் தலைவர் பிரபாகரனுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார் ரவிகரன்



(விஜயரத்தினம் சரவணன், பா.சதீசன்)

மேதகுவின் ஆட்சியில் தமிழர் தாயகப் பரப்பில் கடற்றொழில், விவசாயம் என்பன தன்னிறைவு பெற்றிருந்ததாகவும், போதைப் பொருட்கள் அறவே அற்ற, பாதுகாப்பான சூழல் இருந்ததாகவும் தெரிவித்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், எனவேதான் அவரைத் தமிழ் மக்கள் இறைவனாகப் போற்றுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு தமிழ் இனத்தின் இறைவனான மேதகு வே.பிரபாகரனுக்குத் தனது பிறந்தநாள் வாழ்த்துக்களையும் நாடாளுமன்றத்தில் இன்று அவர் தெரிவித்தார். 03

# வல்வெட்டித்துறையில் வெகுவிமரிசையாக தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் நிகழ்வு






(எஸ்.நிதர்ஷன்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 71 ஆவது பிறந்தநாள் நிகழ்வு இன்று யாழ்ப்பாணம், வடமராட்சி, வல்வெட்டித்துறையில் நடைபெற்றது.

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரின் பூர்வீக இல்லக் காணி சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது வெடி கொளுத்திக் கேக் வெட்டி, எள்ளுப்பாகு, இனிப்புகள் என்பன பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன. 02

# முதலாம் பக்கத் தொடர்ச்சி



**வல்வெட்டித்துறையில்..**

மேலும் சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் பொதுமக்களுக்கு மரக்கன்றுகளும் விநியோகிக்கப்பட்டன.

இதன்போது பெருமளவான ஊர் மக்கள் கலந்து கொண்டு மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டனர்.
















# வல்வெட்டித்துறையில் இரத்த தானம்

**(எஸ்.நிதர்ஷன்)**

வல்வெட்டித்துறை இரத்ததான சங்கத்தின் ஏற்பாட்டில் 83 ஆவது இரத்ததான முகாம் இன்று முன்னெடுக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற பொது மண்டபத்தில் இன்று காலை முதல் நடைபெற்ற இரத்ததான முகாமில் பலரும் பங்கேற்றனர்.



















## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தாந்தாமலை...

அகற்றியமை தொடர்பில் தாந்தாமலை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர், பிரதேச சபை உத்தியோகத்தர் ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், மூவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மூவரும் நேற்று கைது செய்யப்பட்டிருந்த நிலையில் இன்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதவான் மூவரையும் தலா 25 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் டிசம்பர் 10ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### தமிழ் இனத்தின்...

கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

“ஆழக் கடல் எங்கும், சோழ மகராஜன் ஆட்சிபுரிந்தானே அன்று… தமிழீழக் கடலெங்கும் எங்கள் கரிகாலன் ஏறி நடக்கின்றான் இன்று… காலை விடிந்த தென்று பாடு… சங்க காலம் திரும்பியது ஆடு”

தமிழ் இனத்தின் தேசியத் தலைவனது ஆட்சியை வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகப்பரப்பில் வாழ்ந்த தமிழ் மக்கள் இவ்வாறாகத்தான் கொண்டாடினார்கள்.

மேதகுவின் ஆட்சியில் கடலிலே இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்களும் அடாவடிகளும் இருக்கவில்லை. சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் இருக்கவில்லை. மீனவர்கள் மகிழ்ச்சியாகக் கடற்றொழிலில் ஈடுபட்டனர்.

காணி அபகரிப்புக்களும் இல்லை. எனவே, தமிழர் தாயகம் விவசாயத்திலும் செழித்திருந்தது. போதைப் பொருட்கள் அறவே இல்லை. நள்ளிரவிலும் பெண்கள் சுதந்திரமாக உலவக் கூடிய நிலையிருந்தது. தாயகப் பரப்பில் மக்கள் தன்னிறைவு பெற்று பாதுகாப்பாக வாழ்ந்தனர்.

எனவேதான் தமிழ் மக்கள் மேதகுவை இறைவனாகவும், அவரது ஆட்சிக் காலத்தைச் சங்ககாலமாகவும் போற்றுகின்றனர்.

அந்தத் தமிழ் இனத்தின் இறைவனுக்கு இன்று பிறந்தநாள். இந்த உயரிய சபையிலே மேதகுவுக்கு எனது பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.” – என்றார்.




# நெல்லியடியில் மாவீரர் நினைவாலயம்

கரவெட்டி பிரதேச சபையின் ஏற்பாட்டில் நெல்லியடி சந்தியில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவாலயத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் முதல் கரும்புலி மில்லரின் தாயார் ஈகைச்சுடரேற்றி அஞ்சலி செய்தார்.

அதனைத் தொடர்ந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட ஏனையோர் மலர் தூவி அஞ்சலி செய்தனர்.











# நமது கருத்து

## சிறுவர் வீதம் வீழ்ச்சி

நாட்டில் பிரச்சினைகளும் சிக்கல்களும் காலத்துக்கு காலம் மாறும். பல சமயங்களில் அவை நேர் எதிர் திசையில் முரணான நிலைப்பாட்டை எடுப்பதையும் நாம் காண முடியும்.

ஒரு காலத்தில் ஜனத்தொகை பெருக்கத்திற்கு எதிராக தீவிர பிரசாரம் செய்த நாடுகள் - குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களைப் பெரும் நிதிச் செலவில் முன்னெடுத்த தேசங்கள் - இப்போது ஜனப்பெருக்கத்தை ஊக்குவிக்க வேண்டிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கின்றன.

இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல.

இலங்கையில் சிறுவர் மட்டத்திலான எண்ணிக்கை விகிதத்தில் தொடர்ச்சியான மற்றும் கூர்மையான சரிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் அம்பலமாகியுள்ளது.

1946 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, சிறுவர் மட்டத் தொகை 40 தொடக்கம் 42 வீதமாக காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், 2024ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் இந்த தொகை 20 சத வீதமாக குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிறப்பு எண்ணிக்கையில் தொடர்ச்சியான சரிவு, தாமதமாகும் திருமணங்கள் மற்றும் உயர்கல்வியில் பங்கேற்பு அதிகரிப்பு, வெளிநாடுகளுக்கு இடம்பெயர்வு போன்றவை சிறுவர் மட்டத் தொகை குறைவதற்கு முக்கிய காரணங்களாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன.

மேலும், சிறுவர் மட்டத் தொகையில் ஏற்படும் சரிவு எதிர்காலத்தில் தொழிலாளர் பற்றாக்குறைக்கு முக்கிய காரணமாக அமையும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இளையோர் எண்ணிக்கை குறைந்து வயோதிப சமுதாயம் அதிகரிக்கும்.

எனவே, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், ஒட்டுமொத்த பொருளாதாரத்தின் விரிவாக்கம் குறைவாகவே இருக்கும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தீவில் தமிழர் தேசம் ஒரு பகுதிதான். வடக்கும் கிழக்கும் தமிழர்களின் தாயகம். இந்தத் தமிழர் தாயகத்திலும் மக்கள் தொகைப் பெருக்கம் கணிசமான வீதம் வீழ்ச்சி கண்டிருப்பது யதார்த்தம். யுத்தப் பேரழிவுகள், இடப் பெயர்வு என அதற்கு இன்னோரன்ன பல காரணங்கள் உள்ளன.

ஏற்கனவே எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழர்களே நாட்டின் ஜனத்தொகையில் இரண்டாவது நிலையில் இருந்து மேலும் பின் தள்ளப்படக்கூடிய ஆபத்து இருக்கின்றது. தமிழர் தேசம் இது பற்றி அதிக சிரத்தை எடுத்துச் செயல்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. தமிழர்களின் அரசியல், சமூகத் தலைவர்கள் திட்டமிட்டு காரியமாற்ற வேண்டிய மிக முக்கிய விவகாரம் இது.



# சர்வதேச அழகு கலைத்திறன் நிறுவனத்தில் பயிற்சியை பூர்த்தி செய்தோருக்குச் சான்றிதழ்

சர்வதேச அழகு கலைத்திறன் நிறுவனத்தில் மணப்பெண் அலங்காரம் மற்றும் அழகுக்கலை பயிற்சியை பூர்த்தி செய்த பயிலுநர்களுக்கான பதக்கம் அணிவித்து சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், பயிலுநர்களால் அலங்காரம் செய்யப்பட்ட மணப்பெண்கள் கண்காட்சியும் சர்வதேச அழகு கலைத்திறன் நிறுவன பணிப்பாளர் ஜீனத்துல் பாஸீலாவின் தலைமையில் காரைதீவில் நேற்று நடைபெற்றன.

இந்நிகழ்வில் அல்- மீஸான் பௌண்டஷன் தவிசாளரும், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு முன்னாள் உறுப்பினருமான, எஸ்.எல்.டி.பி கொள்கைப்பரப்பு செயலாளர் யூ.எல்.என். ஹுதா, பிரைனி கல்லூரி முகாமைத்துவ பணிப்பாளர் எம்.எல். பரீட்கான் ஆகியோர் பிரதான அதிதிகளாக கலந்து கொண்டு மணப்பெண் அலங்காரம் பயிற்சியை பூர்த்தி செய்த பயிலுநர்களுக்கான பதக்கங்களை அணிவித்து சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.

இந்த நிகழ்வில் நுஜா ஊடக அமைப்பின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.எம். அரூஸ், டீ.டீ. கல்வி நிலைய செயற்பாட்டு பணிப்பாளர் எம். இம்தியாஸ் உட்பட பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.









# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வாக ஞானச்சுடர் மலர் வெளியீடும், கௌரவிப்பும்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஞானச்சுடர் மலர் வெளியீடும், கௌரவிப்பும் இடம்பெறவுள்ளன.

காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஞானச்சுடர் கார்த்திகை மாத 335 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வில், வெளியீட்டுரையை மூத்த ஊடகவியலாளர் சி.தில்லைநாதன் நிகழ்த்தவுள்ளார்.

மதிப்பீட்டுரையை அதிபர் செ.பரமேஸ்வரன் நிகழ்த்தவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கப்படவுள்ளன.

கௌரவிப்பு நிகழ்வில் அமெரிக்காவில் விருது பெற்ற நல்லூர் நாதஸ்வர கலைஞன் பாலமுருகன் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டு பேரவை சார்பில் கௌரவிக்கப்படவுள்ளார்.





# மறவாதே மனமே: ஈழத்தின் விடியலுக்காய் உதிர்ந்த உயிர் பூக்கள்...!



பொனிஸ்ரெலா சந்தியாசன்,
ஊடகக்கற்கைகள் துறை,
இரண்டாம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

“ஒரு இனத்தின் விடுதலைக்காகப் போராடிய போராளிகளை... உயிருடன் குழி தோண்டிப் புதைத்த வரலாறு அது. அதை மறந்து வாழ்வோம் என்பதை விடக் கேவலம் எதுவும் இருக்க முடியாது. ஈழத்தமிழர் மீதான ஒடுக்குமுறைகள், அரச பயங்கரவாதத்தின் வடிவங்கள் இனக்கலவரங்கள் ஆகியவை ஒரு இனத்தின் தன்மானத்தையும் உரிமையையும் வேரோடு சாய்க்க முயன்றபோது, அந்த நெருப்பிலிருந்து பிறந்தவர்களே மாவீரர்கள்.

இது வெறும் ஆசையின் போராட்டம் அல்ல அது இருப்புக்கான போராட்டம். தம் தாய் மண்ணின் மீதும், இனத்தின் மீதும் சுமத்தப்பட்ட அடிமை விலங்குகளை உடைப்பதற்காக, தங்கள் வாழ்க்கையை ஒரு போராட்ட ஆயுதமாக மாற்றிய விடியலின் வித்துக்களான மாவீரர்கள், தமிழீழத்தில் தமிழர்கள் சமத்துவத்துடனும், சுயமரியாதையுடனும், நிம்மதியுடனும் வாழ வேண்டும் என்ற உன்னத இலட்சியத்துக்காகப் போரிட்டார்கள்.

மாவீரர் என்ற சொல், வெறுமனே போரில் இறந்தவர்களைக் குறிப்பதல்ல அது ஒரு மகத்தான இலட்சியத்துக்காகத் தன்னை முழுமையாகத் தகர்த்துக் கொண்டவர்களின் அடையாளம் அவர்களின் தியாகம் உலக வரலாற்றில் ஒப்புவமையற்றது. களத்தில் நின்று, துணிந்து போரிட்டு, எதிரியின் கரங்களில் சிக்காமல் அல்லது சரணடையாமல் தன்னுயிரைத் தாமே அர்ப்பணித்த கரும்புலிகள் போன்றோரின் செயல், ஈழப் போரின் வரலாற்றை நெருப்பால் எழுதியது. காடு, மலை, கடல்பரப்பு என ஈழத்தின் ஒவ்வொரு பகுதியிலும் அவர்கள் சிந்திய உயிர் இரத்தமே விடுதலைப் போராட்டத்தின் அஸ்திவாரம். அவர்கள் மரணத்தைத் தழுவிய துயிலும் இல்லங்கள், ஒரு இனத்தின் அடையாளச் சின்னங்களாக எழுந்து நின்ற வரலாறு இன்று அழிக்கப்பட்டிருந்தாலும், அவர்களின் நினைவு தமிழரின் மனதில் என்றும் அழியாது. ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று, தளபதிகளாகவும், போரளிகளாகவும், களத்தில் உயிர்த் தியாகம் செய்தமை, ஈழப் போரின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சிறப்பு ஆகும்.

“உயிருடன் குழி தோண்டிப் புதைக்கப்பட்ட” அந்தக் கொடூரமான உண்மைகள், வரலாற்றுப் பக்கங்களில் இருந்து புறக்கணிக்கப்படவோ அல்லது மழுங்க டிக்கப்படவோ முடியாது. பல மாவீரர்கள் துன்புறுத்தப்பட்டு, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு, கைகால்கள் கட்டப்பட்ட நிலையிலும் தங்கள் இலட்சியத்தில் உறுதியாக நின்ற னர். இந்த உச்சபட்ச தியாகம், அவர்கள் கொண்ட விடு தலை வேட்கையின் ஆழத்தை உலகுக்கு உணர்த்துகிறது.

மாவீரர்களை நினைவு கூர்வது என்பது கடந்த காலத்தின் வலியைச் சுமப்பது மட்டுமல்ல எதிர்காலத்தின் நீதிக்கான விதையை விதைப்பதாகும். அடக்குமுறையால் அழித்தொழிக்கப்பட்டபோதும், அவர்களின் இலட்சியக் கனவை உயிருடன் வைத்திருப்பதுதான் அந்த வீரர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும். “வரலாற்றால் புறக்கணிக்கப்பட்ட இனம் தனக்கான வரலாற்றை என்றோ ஓர்நாள் படைக்கும்” என்ற நம்பிக்கை, ஈழத்தமிழினத்தின் அசைக்க முடியாத பலம்.

மாவீரர் நாள் (நவம்பர் 27) என்பது வெறும் நினைவு நாள் அல்ல அது உறுதிமொழி ஏற்கும் நாள். அந்த நெருப்புத் தியாகத்தின் காரணமான சுயநிர்ணய உரிமை என்ற இலட்சியத்தை அடையும் வரை, நமது போராட்டம் ஓயாது என்ற சத்தியத்தை மீளவும் உறுதிப் படுத்தும் நாள். மாவீரர்களின் வாழ்க்கை அச்சமின்மை, இலட்சியத்துக்கான அர்ப்பணிப்பு, தன்மானம் ஆகியவற்றின் பாடங்களைக் கற்பிக்கிறது. அவர்களின் உன்னதத் தியாகத்தை மனதில் நிறுத்தி, புதியதொரு வரலாற்றைப் படைக்க வேண்டும். வீரர்களின் இரத்தம் மண்ணில் கலந்தாலும், அது வரலாற்றின் பக்கங்களில் நெருப்பால் எழுதப்பட்ட அழியாப் பக்கங்கள். அந்த நெருப்பை அணைய விடாமல், அதன் ஒளியில் எமது இனத்தின் விடியலுக்கான இலக்கை நோக்கிப் பயணிப்போம்.

வரலாற்றைப் படியுங்கள் வரலாற்றைப் படையுங்கள்!
வரலாற்றை மறந்த இனம் வாழாது,
வரலாறே எங்கள் வழிகாட்டி.

மறப்பது மனித இயல்பு, நினைவு படுத்துவது எமது கடமை,





# நினைவேந்தல் வாரத்தில் மானிப்பாயில் பெற்றோர், உரித்துடையோருக்கு மதிப்பளிப்பு

மண்ணுக்காகத் தம்மை ஈர்ந்தவர்களை நினைவேந்தும் வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில் வழமை போன்று இவ்வருடமும் பெற்றோர், உரித்துடையவர் மதிப்பளிக்கும் நிகழ்வு மானிப்பாயில் இடம்பெற்றது.

செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு திருவள்ளுவர் சன சமூக நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பெற்றோர் உரித்துடையவர் மதிப்பளிக்கப்பட்டனர்.

பிரதேச சபை உறுப்பினர் கலொக்கணநாதன் உஷாந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சபையின் தவிசாளர் ஜெசீதன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கஜதீபன், பிரதேச சபை உறுப்பினர்கள் பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக ஊர்வலமாக பெற்றோர் உரித்துடையவர் அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து பொதுச் சுடரை இரண்டு வீரர்களை மண்ணுக்கு உகந்தளித்த சற்குணராசா தேவமனோகரி அம்மா ஏற்றி வைத்தார்.ஏனைய சுடர்கள் ஏற்றப்பட்டதை தொடர்ந்து மலரஞ்சலி இடம்பெற்றது.

தொடர்ந்து பெற்றோர், உரித்துடையவர் மரக்கன்றுகள் உலர் உணவுப் பொருள்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.









# சுற்றுலாப் பயணிகளுக்கான சேவைகளை மேம்படுத்துவதில் சில சவால்கள் உள்ளன!

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மற்றும் ஒட்டுமொத்த வடக்கு மாகாணமும் இன்று ஒரு புதிய மாற்றத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறது. இருப்பினும், சுற்றுலாத்துறை குறித்தும், குறிப்பாக உள்வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான சேவைகளை மேம்படுத்துவது தொடர்பிலும் நாம் முழுமையான வெற்றியடைவதற்குச் சில சவால்களை எதிர்கொள்ளவேண்டியிருக்கின்றது என்று வடக்கு மாகாண ஆளுநர் கௌரவ நா.வேதநாயகன் அவர்கள் தெரிவித்தார்.

இலங்கைக்கு உள்வரும் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் சங்கம் (SLAITO) வடக்குப் பிராந்தியத்தில் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடையவர்களுடனான விசேட கலந்துரையாடல் ஒன்றை யாழ்ப்பாணம் ஜெட்விங் ஹோட்டலில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது பிரதேசத்தில் உயர்தரமான, சர்வதேச தரத்துக்கு இணையான தங்குமிட வசதிகள் இன்னும் குறைவாகவே உள்ளன. சுற்றுலாப் பயணிகள் தாம் செலவழிக்கும் பணத்துக்கு ஏற்ற பெறுமதியை எதிர்பார்க்கிறார்கள். அந்தத் தரத்தை நாம் உறுதி செய்ய வேண்டும். யாழ்ப்பாண நகருக்கு வெளியே, சுற்றுலாப் பயணிகள் செல்லக்கூடிய இடங்களில் அதிவேக இணைய வசதி, சீரான மின்சாரம் மற்றும் கழிவு முகாமைத்துவ வசதிகள் இன்னும் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளன.

பலாலி விமான நிலையம் மற்றும் இந்தியாவுடனான கடல்வழிச் சேவைகள் விரிவடைந்து வருகின்றமை மகிழ்ச்சிக்குரியது. ஆயினும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான நீண்ட பயண நேரம் சுற்றுலாவிகளுக்கு சிரமத்தை ஏற்படுத்துகிறது. எனவே, கட்டுநாயக்காவிலிருந்து பலாலிக்கான உள்ளூர் விமான சேவையை ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாம் முன்வைத்திருக்கின்றோம். அத்துடன், மாகாணத்துக்குள் சுற்றுலாவிகள் வசதியாகப் பயணிக்கக்கூடிய வீதிப் போக்குவரத்து மற்றும் பொதுப் போக்குவரத்துச் சேவைகள் உருவாக்கப்படுவது அவசியமாகும்.

மனிதவள மேம்பாடு விருந்தோம்பல் துறையில் முறையான பயிற்சி பெற்ற சமையல் கலைஞர்கள், வரவேற்பாளர்கள் மற்றும் முகாமையாளர்கள் குறைவாக உள்ளனர். அதேபோல், ஆங்கிலம் மட்டுமல்லாது வேறு பல சர்வதேச மொழிகளையும் கையாளக்கூடிய தொழில்முறை சுற்றுலா வழிகாட்டிகளுக்கான தேவை அதிகமாக உள்ளது. அனைத்துச் சுற்றுலாத் தலங்களிலும், விடுதிகளிலும் ஒரே மாதிரியான உயர்தர சேவையை வழங்குவதற்குப் போதிய பயிற்சியின்மை ஒரு தடையாக உள்ளது.

நாம் இன்றும் நல்லூர், யாழ்ப்பாணக் கோட்டை மற்றும் தீவுப்பகுதிகளை மட்டுமே மையப்படுத்திச் சுற்றுலாவை முன்னெடுத்து வருகிறோம். இதனைத் தாண்டிச் சூழல் சுற்றுலா, கலாசாரப் பட்டறைகள், பறவைகள் அவதானிப்பு மற்றும் உணவுச் சுற்றுலா போன்ற புதிய அனுபவங்களை உருவாக்க வேண்டும்.

வடக்கு மாகாணம் ஆன்மீகச் சுற்றுலாவுக்கான அதிக ஈர்ப்பைக் கொண்டுள்ளது. குறிப்பாக, மன்னாரில் இராமர் பாலத்தைப் பார்வையிடுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவது தொடர்பான பேச்சுக்கள் மன்னார் மாவட்டச் செயலரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அது வெற்றியடைவதற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளன.

சுற்றுலாப் பயணப் பொதிகள் பெரும்பாலும் யாழ்ப்பாணத்தை மட்டுமே மையமாகக் கொண்டுள்ளன. மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான சுற்றுலாத் திட்டத்தை நாம் வகுக்க வேண்டும்.

பல வரலாற்று மற்றும் கலாசார இடங்கள் இன்னும் அடையாளம் காணப்படாமலோ அல்லது போதிய அடிப்படை வசதிகள் இன்றியோ காணப்படுகின்றன. சுற்றுலாத்தலங்களில் மலசலகூடங்கள் இல்லாமையும், இருப்பவை உரிய சுகாதார வசதியுடன் இல்லாமையும் பெரும் குறையாகும். உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக இவற்றை நிவர்த்தி செய்ய முயற்சிகள் எடுத்துள்ளோம்.

வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகம், உள்ளூராட்சி சபைகள் மற்றும் தனியார் துறை ஆகியன ஒன்றிணைந்து செயற்படுவது வளங்களைச் சரியாகப் பங்கிடவும், தரத்தை உயர்த்தவும் உதவும். முதலீடுகளைச் சரியாக மேற்கொள்ளவும், சேவைகளை மேம்படுத்தவும் சுற்றுலாப் பயணிகள் வருகை குறித்த சரியான தரவுகள் எமக்குத் தேவை. மாகாண நிர்வாகம் என்ற வகையில் எமது முழுமையான ஆதரவு என்றும் உங்களுக்கு உண்டு.- என்றார்.

இந்தக் கலந்துரையாடலில், இலங்கைக்கு உள்வரும் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் அமைப்பின் தலைவர் மற்றும் செயலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத் துறையின் நிகழ்ச்சித் திட்டத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சிவேசன் சிவானந்தமூர்த்தி, வடக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியக உறுப்பினர்கள் மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடையோர் எனப் பலர் கலந்துகொண்டனர்.







# காதலனின் வீட்டில் நகை திருடிய கிளிநொச்சியை சேர்ந்த யுவதி கைது!

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பழைய பொலிஸ் நிலைய வீதியில் உள்ள காதலனின் வீட்டில் நகை திருடிய குற்றச்சாட்டில் கிளிநொச்சியை சேர்ந்த யுவதி ஒருவர் சாவகச்சேரி குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த இளைஞரும் கிளிநொச்சியைச் சேர்ந்த யுவதியும் காதலித்து வந்த நிலையில் இருவருக்கும் திருமணத்துக்கான நாள் நிச்சயிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் காதலி அண்மைய நாள்களாகக் காதலனின் வீட்டில் தங்கியுள்ளார்.

இந்த நிலையில் காதலனின் வீட்டில் தாய் வைத்த தாலிக்கொடி உட்பட 8 பவுண் தங்க நகைகள் காணாமல் போயிருந்தன. இது தொடர்பில் காதலனின் தாயாரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் விசாரணைகளை முன்னெடுத்த சாவகச்சேரி போதை பொருள் மற்றும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் உப பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட விசாரணையில் கிளிநொச்சியில் இருந்து வந்து காதலன் வீட்டில் தங்கியிருந்த காதலி சாவகச்சேரியில் உள்ள காதலன் வீட்டில் வைத்து நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.


அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் தாலிக்கொடியைச் சாவகச்சேரியில் உள்ள தனியார் நிதி நிறுவனத்தில் அடைகு வைத்துள்ளார் என்றும் மீதி நகைகளை யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்துள்ளார் என்றும் தெரியவந்துள்ளது.

இந்தப் பெண் ரிக்ரொக் சமூக வலைத்தளத்தில் உள்ள நண்பர் ஒருவரின் உதவியுடன் இணைய முதலீட்டு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளார் என்றும் இதுவரையில் 27 லட்சம் ரூபா செலுத்தியுள்ளார் எனவும் மேலதிக பணம் செலுத்துவதற்காக காதலன் வீட்டில் திருடியுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று அண்மைய நாள்களில் வேறு சில சம்பவங்களும் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இளம் யுவதி ஒருவர் தனது நகையை விற்பனை செய்து இணைய முதலீட்டு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார். பின்னர் நகை திருட்டு போயுள்ளது என்று பொய் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

எனவே பொதுமக்கள் குறிப்பாக இளைஞர், யுவதிகள் இணைய மோசடி தொடர்பில் மிக அவதானமாக இருக்க வேண்டும் என்று சாவகச்சேரி பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.



# இந்திய மீனவர், சட்டவிரோதிகளின் அடாவடிகளால் வடக்கில் வாழ்வாதாரக் கருவூலம் சிதைக்கப்படுகிறது!

## நாடாளுமன்றில் ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு

**(விஜயரத்தினம் சரவணன்)**

இந்திய மீனவர்களின் அத்துமீறல் மற்றும் சட்டவிரோத மீன்பிடியாளர்களின் அடாவடித்தனமான செயற்பாடுகளாலும் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரக் கருவூலமான வடக்குக் கடல் சூறையாடப்படுகிறது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறாக எல்லோரும் சூறையாடிச் செல்வதற்கு வடக்கு கடல் ஓர் ஒழுங்கு படுத்தப்படாத, திறந்தவெளி அணுகல் வலயம் அல்ல என கடற்றொழில் அமைச்சரைக் கடிந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், வடக்குக் கடலென்பது வடமாகாணத்தைச் சார்பாக்கும் மீனவர்களின் வாழ்வாதாரத்திடல் எனவும், அது அவர்களின் உரித்தெனவும் தெரிவித்தார். இந்தக் கடல் இந்தத் தலைமுறைக்கு மட்டும் அல்ல. இனி வரும் சந்ததிகளுக்குமானது.

இனிவரும் காலத்துக்குமாக இந்தக் கடல் வளத்தை முறையாகப் பேணுவதுடன், வடக்கு மீனவர்களின் நிலைபேறான கடற்றொழில் வாழ்வை அரசு உறுதிப்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் இன்று இடம்பெற்ற கடற்றொழில், நீரியல்வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இததன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

போசணையிலும் வேலைவாய்ப்பிலும் உணவுப் பாதுகாப்பிலும் அந்நியச் செலாவணியிலும் அரச வருவாயிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றுகின்ற கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் தொடர்பான இன்றைய விவாதத்தில் வன்னி மாவட்டத்தில் இன்னமும் சீர் செய்யப்படவேண்டியுள்ள பகுதிகளை விவாதிக்க விரும்புகிறேன்.

கிட்டத்தட்ட ஒவ்வோர் ஆண்டும் மொத்த தேசிய உற்பத்தியில் 1 சதவீத பங்களிப்பை கடற்றொழில் வழங்குகிறது. கடந்த ஆண்டின் தேசிய ஏற்றுமதி வருவாயில் 2.4 வீத பங்களிப்பை வழங்கியுள்ளது. இலங்கை வாழ் மக்களின் விலங்கு புரத உட்கொள்ளலில் 50 வீதத்துக்கும் அதிகமான பங்களிப்பை கடல்சார் உணவுகள் வழங்குகின்றன.

இது உலகளாவிய சராசரியிலும் மூன்று மடங்கு உயர்வாகும். ஒரு மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்கள் நேரயாகவோ மறைமுகமாகவோ இந்த மீன்வளத்தை வாழ்வாதார மூலமாக நம்பியுள்ளனர். கடலோர மீன்பிடி, கடலோர மற்றும் ஆழ்கடல் மீன்பிடி, நன்னீர் மீன்பிடி மற்றும் மீன்வளர்ப்பு அனைத்தும் கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் துறைக்கு முக்கிய பங்காற்றுகின்றன. இருப்பினும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறையின் வலிமை சீரற்றது. குறிப்பாக வடகடல் பகுதியில் மிகவும் சீரற்ற அணுகல் கடற்றொழில் பரப்பில் காணப்படுகிறது.



இலங்கையின் கடந்த ஆண்டின் மொத்த மீன் விளைச்சலின் 16 வீத பங்களிப்பை வடகடல் வழங்கியுள்ளது. கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்திணைக் களத்தின் 2024 ஆம் ஆண்டு அறிக்கை ,தனைச் சுட்டிக்காட்டுகிறது. ஆனால் வடகடலின் பங்களிப்பு அதன் வள நிலையுடன் ஒப்பிடும் போது மிகக் குறைவாகவே உள்ளது. உள்ளூரில் தொடரும் சட்டவிரோத மீன்பிடி முறைகள், எல்லைதாண்டிய இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய மீள்வளச்சுரண்டல் வடகடலின் மீன்விளைச்சலுக்கு சவாலாகும் முக்கிய காரணிகள் ஆகின்றன.

சட்டத்துக்குப் புறம்பான, ஒழுங்கு படுத்தப்படாத, அறிக்கைப்படுத்தப்படாத மீன்பிடியால் வருடாந்தம் உலகளாவிய வகையில் 26-50 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருளாதார இழப்பு ஏற்படுவதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்திணைக்களத்தின் 2020 ஆம் ஆண்டின் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் துறைமுக அபிவிருத்திப் பணிகள், படகுத்தள மறுசீரமைப்பு, மீன்பிடி தொழிலுக்கான துணை உபகரணங்களை வழங்கல், நன்னீர் மீன்பிடி ஊக்குவிப்பு, விழிப்புணர்வுத் திட்டங்கள், ஆராய்ச்சி முன்னெடுப்புகள் உள்ளிட்டவற்றுக்கான முன்மொழிவுகளை வரவேற்பதோடு மீனவர்களுக்கும் நிலைபேறான மீன்வளச் சூழமைவுக்கும் பெரும் அச்சுறுத்தலாகும் காரணிகளை இழிவளவாக்குவதற்கான முயற்சிகளிலும் கூடுதல் கரிசனை கொள்ளுமாறு கடற்றொழில் அமைச்சரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

வடமாகாணத்தில் உள்ள மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் பல முறை இந்த அவையிலே விவாதிக்கப்பட்டன. ஏனைய துறைகளில் கொள்ளும் கரிசனையைக்கூட இத்துறையில் இதுவரை அரசு காட்டாதிருப்பது சற்று ஏமாற்றமாகத்தான் இருக்கிறது. இதுவரை காத்திரமான முடிவுகள் எட்டப்படாது நீடித்திருக்கும் இப்பிரச்சினைகளால் கடலை நம்பி வாழும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இழுவைமடி படகுகள், வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல், வெடிவைத்து மீன்பிடித்தல், சுருக்கு வலைகளில் மீன் பிடித்தல் உள்ளிட்டவை இலங்கையின் சட்டத்துக்கு அமைவாகத் தடைசெய்யப்பட்ட தொழில் முறைகள். இத்தொழில் முறைகளால் இலங்கையின் கடல் வளம் – அதிலும் குறிப்பாக வடகிழக்கின் கடல் வளம் தற்போது வெகுவாக சீர்குலைக் கப்பட்டு வருகிறது.

சட்டங்கள் இயற்றப்பட்டாலும் அவை இதுவரை நடைமுறைப்படுத்தப்படாதிருப்பது அரசின் தவறே.சட்டத்துக்கு புறம்பாக இயங்குபவர்கள் கட்டுப்படுத்தப்படவேண்டிய சூழ்நிலையில் தற்போது சட்டத்தை மதித்து இயங்குபவர்களே தண்டிக்கப்படுகிறார்கள். அவர்களின் நாளாந்த வாழ்வாதாரம் தண்டிக்கப் படுகிறது.

தடைசெய்யப்பட்ட தொழில்முறைகளைக் கட்டுப்படுத்தாதிருக்கும் போது நாளுக்கு நாள் அவ்வாறான தொழில் முறைகளைப் பயன்படுத்தும் மீனவர்களின் எண்ணிக்கை வடகடல்பரப்பில் அதிகரித்துச்செல்கிறது. தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளில் நூற்றுக்கணக்கான கிலோ மீன்களை பிடித்து இலாபம் உழைக்கும் அதே கடற்பரப்பில் ஐந்து கிலோ பத்துகிலோ என எரிபொருளுக்கும் வருவாய் ஈட்டாத அளவுக்கு பாரம்பரிய மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

முல்லைத்தீவில் கடந்த 2024 ஆம் ஆண்டு 12,335 மெற்றிக் தொன் அளவிலான மீன்வளங்கள் கடற்றொழில் ஊடாக பெறப்பட்டதாக தங்கள் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இவ்வளவு தொகை மீன்களில் வெளிச்சம் பாய்ச்சியும் வெடிவைத்தும் இரவு வேளைகளில் சுருக்குவலைகளைப் பயன்படுத்தியும் பிடித்த மீன்கள் எவ்வளவு மெற்றிக்தொன் என்ற புள்ளிவிவரம் ஏதேனும் தங்களிடம் உள்ளதா? ஏனெனில் பெரும்பாலான நேரத்தில் எரிபொருளுக்கும் வருவாய் ஈட்டாத அளவு மீன்களுடனேயே பாரம்பரிய மீனவர்கள் கரை திரும்புகின்றனர்.

இந்த அரசு யாரைக்காக்கிறது? யாரை வஞ்சிக்கிறது? என்று தெரியவில்லை. கடல் தொழிலில் இந்த அரசு ஊழலுக்கு துணைபோகின்றது என்பதையே நடக்கும் நிகழ்வுகள் சான்றாக்குகின்றன.

இத்தகைய மீன்பிடி முறைகள் இந்த ஆண்டோடு அதாவது 2025ஆம் ஆண்டோடு முற்றாக இலங்கைக்குள் தடை செய்யப்படும் என மீன்பிடி அமைச்சர் இவ்வாண்டு உறுதியளித்திருந்தார்.

மீன்பிடி அமைச்சர் உங்கள் வாக்குறுதியை நீங்கள் நிறைவேற்றுவீர்களா? அறத்தை மதித்து கடலை மதித்து மீன்பிடிக்கும் மீனவர்கள் உங்கள் காலத்தில் பட்டினியால் மாண்டார்கள் என்பதை நிகழ்வாக்கவேண்டாம் என தயவுடன் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கை கடற்பரப்பினுள் தொடர்ச்சியாக அத்துமீறும் இந்திய இழுவைப் படகுகளை கட்டுப்படுத் தவேண்டியதும்

தொடர்ச்சி▼

# இந்திய மீனவர்...

**தொடர்ச்சி▲**

இந்த அரசின் கடப்பாடு. இத்தகைய தொடர்ச்சியான அத்துமீறல் நாட்டின் இறையாண்மையை கேள்விக்கு உள்ளாக்குகிறது.

எல்லோரும் பயன்படுத்திச் செல்வதற்கு வடக்கு கடல் ஓர் ஒழுங்குபடுத்தப்படாத, திறந்தவெளி அணுகல் வலயம் அல்ல. மாறாக இது வடமாகாணத்தைச் சார்பாக்கும் மீனவர்களின் வாழ்வாதாரத்திதல்.அவர்களின் உரித்து. இந்தக்கடல் இந்தத் தலைமுறைக்கு மட்டும் அல்ல. இனிவரும் சந்ததிகளுக்குமானது. இனிவரும் காலத்துக்குமாக இக்கடல் வளத்தை முறையாக பேணவேண்டியது எம் எல்லோரதும் பொறுப்பு.

1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடற்றொழில் நீர் வாழ் உயிரினவளங்கள் சட்டத்தின் 27ஆம் பகுதியின் முதல் கூற்று, இலங்கை நீர்நிலைகளில் மீன் அல்லது பிற நீர் வாழ் வளங்களை நஞ்சாக்குதல், கொல்லுதல், அதிர்ச்சி ஊட்டுதல் அல்லது முடக்குதல் போன்ற நோக்கங்களுக்காக ஏதேனும் நஞ்சு, வெடிப்பு அல்லது மயக்கத்தை ஏற்படுத்தும் பொருள் (டைனமிக் உட்பட) அல்லது பிற தீங்கு விளைவிக்கும் பொருளைப் பயன்படுத்தல் அல்லது பயன்படுத்த முயற்சித்தலைத் தடைசெய்கிறது.

முல்லைத்தீவு கடற்பரப்பில் இத்தகைய தடைசெய்யப்பட்ட தொழில் முறைகள் இன்றளவும் நடைபெறுகின்றன. குறித்த சட்டத்தின் இரண்டாம் கூற்று அவ்வாறான பொருள்களைத் தரைக்கு கொண்டு வருதல், விற்றல், வாங்குதல், வைத்திருத்தல், கொண்டுசெல்லல் போன்ற வற்றையும் தடைசெய்கிறது.

அத்தகைய பொருள்கள் தரைக்குக் கொண்டுவரப்படுகின்றன. விற்கப்படுகின்றன. வாங்கப்படுகின்றன. கொண்டு செல்லப்படுகின்றன.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் அல்லது தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளை சாதாரண உள்ளூர் மீன்பிடி படகுகளில் வைத்திருப்பதையோ பயன்படுத்துவதையோ தடைசெய்கிறது. அத்தகைய தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் மீன்பிடி படகுகளில் வைத்து பயன்படுத்தப்படுகின்றன.

இலங்கை கடற்படை, கடலோர பாதுகாப்புத் திணைக்களம், கடற்றொழில் திணைக்களம், தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம், பாதுகாப்பு அமைச்சு, இராணுவம் என அனைத்து துறையினரும் இணைந்து கூட இலங்கை மீனவர்களின் தடைசெய்யப்பட்ட தொழில்முறைகளையும் எல்லை தாண்டிவரும் இந்திய மீனவர்களையும் கட்டுப்படுத்த இயலவில்லை.

முல்லைத்தீவின் கடற்பரப்பில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத தொழில் முறைகள் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளரிடம் முறையிடச்செல்லும் போது தன்னிடம் போதியளவு ஆளணி இல்லை என பதிலளிப்பதாகவே மீனவர்கள் எம்மிடம் முறையிடுகின்றனர்.

அவ்வாறு போதிய அளவு ஆளணி உங்களிடம் இல்லையேல் இன்றுவரை சட்டத்துக்கு இசைவாக மீன்பிடிக்கும் எங்களின் நூற்றுக்கணக்கான மீனவர்கள் உங்கள் திணைக்களத்துடன் வருகிறோம். கட்டுப்படுத்துங்கள்.

ஒவ்வொரு முறைகேடும் இங்கு நடைபெறும் போது எங்களுக்கு விடுதலைப் புலிகளின் நிழல் நிர்வாகத்தையே உங்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டியுள்ளது.

விடுதலைப்புலிகளின் காலத்தில் இங்கு இந்திய மீனவர்களும் எல்லை தாண்டி வரவில்லை. இலங்கை மீனவர்களும் தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளை இங்கு பயன்படுத்த முனையவில்லை. அவர்களால் இயல்பாக கொண்டுவரமுடிந்ததை ஓர் அரசாகக்கூட ஏன் உங்களால் இதுவரை இயலவில்லை.- என்றார்.



## கொழும்பில் இருந்து சூட்சுமமான முறையில்

# போதை மாத்திரை கடத்தி வந்து விற்ற மூன்று பேர் யாழ்ப்பாணத்தில் கைது!

**(எஸ்.நிதர்ஷன்)**

கொழும்பில் இருந்து சூட்சுமமான முறையில் போதை மாத்திரைகளைக் கடத்தி வந்து விற்பனை செய்தவர் உள்ளிட்ட மூன்று பேர் யாழ்ப்பாணத்தில் நேற்று கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மாசி கருவாடு சம்பல் போத்தலுக்குள் மறைத்து போதை மாத்திரைகளை கடத்தி வந்து விற்பனையில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில், அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர்.

போதை மாத்திரை கடத்தல் மற்றும் விற்பனை செய்த சம்பவம் தொடர்பாகக் கைதான மூன்று பேரும் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இரண்டு கிராம் மற்றும் மூன்று கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் மேலும் இரண்டு சந்தேக நபர்களும் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளுக்குப் பின்னர் கைதான ஐந்து பேரையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# பச்சிளைப்பள்ளி பகுதியில் இடம்பெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு

(பூ.லின்ரன்)

கிளிநொச்சி பச்சிளைப்பள்ளி பளை பகுதியில், பளை பிரதான பஸ் தரிப்பிடத்துக்கு அருகாமையில் இன்று மாவீரர் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு இடம்பெற்றது

இவ் கௌரவிப்பு நிகழ்வில் ஆரம்பத்தில் மாவீரர் பெற்றோர், உரித்துடையோர் மங்கள வாத்தியத்துடன் அழைத்து வரவேற்கப்பட்டு மாவீரர் பெற்றோரால் நினைவு சுடர் ஏற்றப்பட்டது. அதனை தொடர்ந்து மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.



இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் மற்றும் பச்சிளைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுரேன், பச்சிளைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மாவீரர் பெற்றோர், மாவீரர் உரித்துடையோர் என பலரும் கலந்து கொண்டனர்.







# வெள்ளத்தில் நீரில் மூழ்கிக் காணப்படும் அட்டாளைச்சேனை பிரதேசத்து வீதிகள்

(நவாஸ்)

அம்பாறை மாவட்டத்தில் பெய்துவரும் அடை மழையால் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வீதிகள் பலவும் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன. அத்தோடு மக்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள தைக்கா நகர் மற்றும் புறத்தோட்டம் பகுதிகளில் உள்ள வீதிகள் பெரும்பாலானவை நீரில் மூழ்கிக் காணப் படுகின்றன.

அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள வெள்ள நீரை வெளியேற்றுவதிலும், மக்களின் இயல்பு நிலையைக் கொண்டு வருவதற்காகவும், அட்டாளைச்சேனை பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகம் என்பன பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

---





# வெள்ளக் காடாகியுள்ளது அம்பாறை மக்களை அவதானமாக இருக்க அறிவுறுத்து!

(நூருல் ஹுதா உமர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலையால் அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழையால் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன், மக்கள் அதிகம் பாவிக்கும் முக்கிய வீதிகள் பலவும் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன.

அத்தோடு மக்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, மாளிகைக்காடு, சாய்ந்தமருது, பாண்டிருப்பு, கல்முனை , நாவிதன்வெளி, மருதமுனை, பெரியநீலாவணை போன்ற பிரதேசங்களும் தாழ்நிலப் பகுதிகளிலுள்ள சில வீட்டுத்திட்டங்களும் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன.

மரங்கள் அடியோடு சாய்ந்தும், முறிந்து விழுந்துள்ளதால் போக்குவரத்தும் சில இடங்களில் தடைப்பட்டுள்ளன. மாவட்டத்தில் தொடர்ந்தும் மழை பெய்து வருகின்றது. இதனால் தாழ்நிலப் பிரதேசங்கள், வீடுகள், வீதிகள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கக் கூடிய அபாயமும் உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பெய்துவரும் கனமழை காரணமாக அம்பாறை மாவட்டத்தின் பாதைகளுக்கு மேலாக வெள்ள நீர் பாய்ந்தோடுவதால் பொது மக்களுக்கான சீரான போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம் றியாஸ் சிரேஷ்ட பொலிஸாரிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.



# உடுத்துறை மாவீரர் நினைவாலயத்தில் மாவீரர் வார ஆறாம் நாள் நினைவஞ்சலி!

(பூ.லின்ரன்)

வடமராட்சி கிழக்கு, உடுத்துறை மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் ஏற்பாட்டு குழுவின் ஒழுங்கமைப்பில் இன்று மாவீரர் வாரத்தின் ஆறாம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இன்றைய மாவீரர் வார ஆறாம் நாள் நினைவஞ்சலி நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்கள், உறுவினர்கள் என பலரும் கலந்துகொண்டு சுடரேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.







# இன்று கிட்டங்கி பாதை பூட்டு; படகுப் பயணம் ஆரம்பமானது!

(வி.ரி. சகாதேவராஜா)

வெள்ளம் காரணமாக கல்முனையை அடுத்துள்ள கிட்டங்கி தாம்போதி வீதி இன்று புதன்கிழமை போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள் ளது. அங்கு படகு சேவைக்கு மாத்தி ரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மக்கள் தமது அவசர தேவைகளின் நிமித்தம் படகுகளில் பயணித்து வருகின்றனர்.







# திருமலையில் கனமழையால் நீரில் மூழ்கிய தாழ் நிலங்கள்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

தற்போது பெய்து வரும் காற்றுடன் கூடிய கனமழை காரணமாக திருகோணமலை மாவட்ட தம்பலகாம பிரதேச செயலர் பிரிவில் உள்ள தாழ் நிலப் பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனால் இன்று குறித்த பகுதிக்கு தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளர் எச்.தாலிப் அலி உள்ளிட்டோர் விஜயம் மேற்கொண்டு நீரில் மூழ்கியுள்ள மற்றும் போக்குவரத்துக்கு தடையான வீதிகள் தொடர்பிலும் பார்வையிட்டனர். உடனடியாக நீரை வெளியேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதனால் முள்ளிப்பொத்தானை பாதிமா பாலிகா பாடசாலை வீதி, 4 ஆம் வாய்க்கால் வீதி, பாலம் போட்டாறு, புதுக்குடியிருப்பு உள்ளிட்ட பகுதிகளை பார்வையிட்டனர். கனமழை தொடர்ந்தும் பெய்து வருவதால் உயர்தரப் பரீட்சைக்குச் செல்லும் மாணவர்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.





# மட்டக்களப்பிலும் பலத்த மழையால் தாழ் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பிலும் பலத்த மழை காரணமாகத் தாழ் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. நவகிரிப் பகுதியில் 171.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

மட்டக்களப்பில் கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் பரவலாக பலத்த மழை பெய்து வருகின்றது. இதனால் தாழ் நிலங்களில் வெள்ள நீர் தேங்கியுள்ளதோடு, உள்ளூர் வீதிளிலும் வெள்ளநீர் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்கின்றது.

அந்தவகையில் மட்டக்களப்பு நகரில் 93.6 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், நவகிரிப் பகுதியில் 171.2 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், தும்பங்கேணிப் பகுதியில் 102 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், உன்னிச்சைப் பகுதியில் 143 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், உறுகாமம் பகுதியில் 133.3 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், வாகனேரிப் பகுதியில் 44.3 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், கட்டுமுறிவு பகுதியில் 34 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், இன்று புதன்கிழமை காலை 8.30 மணியுடன் கடந்த 24 மணித்தியாலங்களில் பதிவாகியுள்ளது என்று மட்டக்களப்பு மாவட்ட வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் களுதாவளை, களுவாஞ்சிகுடி, வெல்லாவெளி, பழுகாமம், பட்டிப்பளை, வவுணதீவு, உள்ளிட்டபல பகுதிகளிலும் அமைந்துள்ள சிறு குளங்களின் நீர்மட்டங்களும் வெகுவாக உயர்ந்துள்ளன. எனினும் மாவட்டத்திலுள்ள மிகப் பிரதான குளங்களின் நீர் மட்டமும் உயர்ந்துள்ளன.

அந்த வகையில் நவகிரிக் குளத்தின் நீர்மட்டம் 22.4 அங்குலம் உயர்ந்துள்ளதோடு அக்குளத்தில் 3 அடி உயரத்தில் 2 வான்கதவுகள் திறக்கப்பட்டள்ளன. தும்பங்கேணிக்குளத்தின் நீர்மட்டம் 10 அடி, உன்னிச்சைக் குளத்தின் நீர்மட்டம 20 அடி, வாகனேரிக் குளத்தின் நீர்மட்டம் 15 அடி உயர்ந்துள்ளது. உறுகாமம் குளத்தின் நீர்மட்டம் 12 அடி உயர்ந்துள்ள நிலையில் அக்குளத்தின் 2 வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. புணாணை அணைக்கட்டின் 6 வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன என்று அக்குளங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேட்டுநிலப் பயிற் செய்கைகளிலும், மழைநீர் தேங்கியுள்ளதாதல் தமது பயிற் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# வாயில் தூண்டிலுடன் வலையில் சிக்கிய அரிய வகை கடலாமை கடலில் விடப்பட்டது!



(மன்னார் நிருபர்)

தனுஷ்கோடி தெற்கு மன்னார் வளைகுடா கடற்கரையில் கரை வலை மீன் பிடிப்பில் ஈடுபட்டிருந்த மீனவர்களின் வலையில் வாயில் இரும்பு தூண்டிலுடன் சிக்கிய அரிய வகை கடல் ஆமையை உயிருடன் மீட்டு பத்திரமாக கடலில் விட்ட மீனவர்களுக்கு வனத்துறையினர் பாராட்டு தெரிவித்துள்ளனர். இராம நாதபுரம் மாவட்டம் மண்டபம், பாம்பன், உச்சிப்புளி, சேராங்கோட்டை, தனுஷ்கோடி உள்ளிட்ட பகுதிகளில் மீனவர்கள் கரை வலை மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இராமேஸ்வரம் அடுத்த தனுஷ்கோடி தெற்கு மன்னார் வளைகுடா கடற்கரையில் நேற்று மீனவர்கள் கரை வலை மீன்பிடியில் ஈடுபட்டு கொண்டிருந்த போது மீனவர்கள் வலையில் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் வாழும் அரிய வகை கடல் வாழ் உயிரினமான சித்தாமை ஒன்று வாயில் இரும்பு தூண்டில் மாட்டிய நிலையில் உயிருடன் சிக்கியது.

இதை அறிந்த மீனவர்கள் வலையில் இருந்த பிற மீன்களைப் பிரித்து எடுத்து விட்டு வாயில் இரும்பு தூண்டிலுடன் உயிருடன் வலையில் சிக்கி உயிருக்கு போராடிக்கொண்டிருந்த ஆமையை மீட்டு முதலுதவி அளித்து உடனடியாக கடலில் உயிருடன் பாதுகாப்பாகக் கடலில் விட்டனர்.

ஆமையின் வாயில் சிக்கிய இரும்பு தூண்டில், மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு தூண்டிலில் மீனை மாட்டி கடலில் போட்ட போது அது ஆமையின் வாயில் சிக்கியிருக்கலாம் என்ற தெரிவிக்கப்பட்டுள்ளது. நீண்ட நாள்களாக ஆமை அவதிப் பட்டு வந்திருக்காலாம் என மீனவர்கள் தெரிவித்தனர். தமிழக அரசின் வனத்துறை சார்பில் அழிவின் விளிம்பில் உள்ள கடல் வாழ் உயிரினங்களை பத்திரமாக மீட்டு கடலில் விடும் மீனவர்களுக்கு வழங்கும் பரிசுத் தொகையை மீனவர்களுக்கு வழங்க உள்ளனர் என்று வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.



# வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க எமக்குள் ராமரை நாம் எழுப்ப வேண்டும்

## பிரதமர் மோடி தெரிவிப்பு



எதிர்வரும் 2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க நாம் விரும்பினால், நம்முள் ராமரை நாம் எழுப்ப வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அயோத்தியில் ராமர் கோயில் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த நிலையில், கோயில் கோபுர உச்சியில் காவிக்கொடி ஏற்றும் விழா நேற்று கோலாகலமாக நடைபெற்றது. பிரதமர் நரேந்திர மோடியும், ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பாகவத்தும் இணைந்து காவிக்கொடியை கோயில் உச்சியில் ஏற்றினர். இதனைத் தொடர்ந்து பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

“இந்தக் கொடி சாதாரண கொடி அல்ல. இது இந்திய நாகரிகத்தின் மறுமலர்ச்சியின் சின்னம். இந்தக் கொடியில் உள்ள காவி நிறம், சூர்யவம்சத்தின் குறியீடு, ஓம் எனும் எழுத்து, கோவிதாரா மரம் ஆகியவை ராம ராஜ்ஜியத்தின் புகழை பறை சாற்றுகின்றன. இது ஒரு தீர்மானம், இது ஒரு வெற்றி, இது உருவாக்கத்தின் போராட்டக் கதை, 100 ஆண்டுகால போராட்டத்தின் வடிவம்.

வர இருக்கும் ஆயிரக்கணக்கான நூற்றாண்டுகளுக்கு இந்தக் கொடி, பகவான் ராமரின் மதிப்புகளைப் பறை சாற்றும். உண்மையே தர்மம். பாகுபாடோ வலியோ இருக்கக்கூடாது. அமைதியும் மிகழ்ச்சியுமே இருக்க வேண்டும். ஏழ்மையோ, உதவியற்ற நிலையே ஒருபோதும் இருக்கக்கூடாது.

ஒருவரால் கோயிலுக்குள் வர முடியா விட்டாலும் அவர் வெளியில் இருந்தவாறு கோயில் கொடியை வணங்கினாலே அவர் கோயிலுக்கு வந்ததன் பலனைப் பெறுவார் என்கின்றன நமது புராண நூல்கள். தொலைதூரத்தில் இருந்து பார்க்கும்போது இந்தக் கொடி, ராமர் பிறந்த இடத்தை குறிக்கும். அதோடு, ராமரின் கட்டளைகளையும் உத்வேகங்களையும் அனைத்து மனித குலத்துக்கும் தெரிவிக்கும்.

ராமர் கோயில் கட்டுமானத்தில் பங்களிப்பு வழங்கிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ராமர் கோயில் கடுமானப் பணியில் ஈடுபட்ட ஒவ்வொரு தொழிலாளி, கைவினைஞர், கட்டட கலைஞர், தொழிலாளி என அனைவரையும் நான் வாழ்த்துகிறேன். உணர்ச்சிகளின் மூலம் ராமர் நம்மோடு இணைகிறார். அவரிடம் எந்த வேறுபாடும் இல்லை. அவருக்கு முக்கியம் பக்திதான், பரம்பரை அல்ல. அவர் ஒத்துழைப்பை மதிக்கிறார், அதிகாரத்தை அல்ல. தற்போது நாம் இதே மனப்பான்மையுடன் முன்னேறி வருகிறோம்.

கடந்த 11 ஆண்டுகளில் பெண்கள், தலித்துகள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர், தாழ்த்தப்பட்டோர், விவசாயிகள், தொழிலாளர்கள், இளைஞர்கள் என சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரும் வளர்ச்சியின் மையத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர். 2047 இல் இந்தியா தனது சுதந்திர தினத்தின் 100 ஆம் ஆண்டை கொண்டாட உள்ளது. அதற்குள் நாம் வளர்ச்சி அடைந்த இந்தியாவை கட்டமைக்க வேண்டும். அடுத்தஆயிரம்ஆண்டுகளுக்குஇந்தியாவின் அடித்தளத்தை நாம் வலுப்படுத்த வேண்டும்.

நிகழ்காலத்தைப் பற்றி மட்டுமே நினைப்பவர்கள் எதிர்கால சந்ததியினருக்கு அநீதி இழைக்கிறார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நிகழ்கால சந்ததியினர் குறித்து சிந்திப்பது போலவே, எதிர்கால சந்ததியினர் குறித்தும் நாம் சிந்திக்க வேண்டும். ஏனெனில், நாம் இல்லாத போதும் இந்த நாடு இருந்தது, நாம் இல்லாதபோதும் நாடு இருக்கும்.

நாம் ஒரு துடிப்பான சமூகம். நாம் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட வேண்டும். வர இருக்கும் 10 ஆண்டுகளையும் நூற்றாண்டுகளையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். நாம் பகவான் ராமரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும், அவரது ஆளுமையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவரது நடத்தையை நாம் உள்வாங்க வேண்டும்.

ராமர் என்பது ஒரு நபர் அல்ல. அவர் ஒரு மதிப்பு. 2047 இற்குள் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க விரும்பினால், நாம் நமக்குள் ராமரை எழுப்ப வேண்டும். இதற்கான தீர்மானத்துக்கு இந்த நாளைவிட சிறந்த நாள் எதுவாக இருக்க முடியும்.” என்று தெரிவித்தார்.

# இந்தியப் பயணத்தை ரத்து செய்தார் இஸ்ரேலியப் பிரதமர் நெதன்யாகு



இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மீண்டும் ஒருமுறை இந்திய பயணத்தை ரத்து செய்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்த வருட இறுதியில் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பிரதமர் மோடியை சந்திக்க திட்டமிட்டிருந்தார்.

டில்லியில் நடைபெற்ற குண்டு வெடிப்புக்குப் பிறகு, பாதுகாப்பு கவலை காரணமாக பயணத்தை ஒத்தி வைத்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது. நெதன்யாகு கடந்த 2018 ஆம் ஆண்டு இந்தியா சென்றிருந்தார். பாதுகாப்பு மதிப்பீடு நிலுவையில் உள்ள நிலையில் அடுத்த வருடம் தொடக்கத்தில் வரும் வகையில் புதிய திகதியை கோருவார் எனத் தெரிகிறது. நெதன்யாகு இந்தியா வரும் திட்டத்தை ரத்து செய்வது இது 3 ஆவது முறையாகும்.

கடந்த செப்டம்பர் 9ஆம் திகதி நெதன்யாகு இந்தியா வருவதற்கு இருந்தார். ஆனால், முன்னெப்போதும் இல்லாத வகையில் செப்டம்பர் 17 ஆம் திகதி மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டதால் இந்திய பயணத்தை அவர் ரத்து செய்தார்.

அதற்கு முன் கடந்த ஏப்ரல் மாதமும் தேர்தல் காரணமாக இந்திய பயணத்தை ரத்து செய்திருந்தார். கடந்த 2017ஆம் ஆண்டு இந்திய பிரதமர் மோடி இஸ்ரேல் சென்றிருந்தார். இஸ்ரேல் சென்ற முதல் இந்திய பிரதமர் மோடி ஆவார்.

# அமெரிக்கா, ரஷ்யாவுடன் உக்ரைனும் அபுதாபியில் பேச்சில் பங்கேற்றுள்ளது









உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவரும் வகையில், அமெரிக்கா, ரஷ்யாவுடன் உக்ரைனும் அபுதாபியில் பேச்சுவார்த்தையில் பங்கேற்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ரஷ்ய தரப்புடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட அமெரிக்க இராணுவ செயலாளர் டான் டிரிஸ்கோல், உக்ரைனின் இராணுவ புலனாய்வுத் தலைவர் கைரிலோ புடனோவுடன் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷ்யாவின் மிகப்பெரிய விமான உற்பத்தி ஆலை ஒன்றை உக்ரைன் உக்கிரமாகத் தாக்கியதன் பின்னணியிலேயே, இந்த உயர்மட்டக் கூட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதலில் ரஷ்யாவின் லேசர் ஆயுதங்களுக்கான விமானம் ஏ -60 மொத்தமாக தீக்கிரையாகியுள்ளது. கருங்கடல் துறைமுகமான நோவோரோசிஸ்கில் குடியிருப்பு கட்டடங்கள் சேதமடைந்ததுடன் மூன்று பேர் கொல்லப்பட்டனர். மற்றும் குறைந்தது 16 பேர் காயமடைந்தனர்.

இதனிடையே, ஒரே இரவில் 249 உக்ரைனிய ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. கருங்கடலுக்கு மேல் 116 ட்ரோன்களும், கிராஸ்னோடர் மற்றும் ரோஸ்டோவின் தெற்குப் பகுதிகளுக்கு மேல் 92 ட்ரோன்களும் வீழ்த்தப்பட்டன.

உக்ரைனின் ஒடேசா பகுதியைத் தாக்கும் ரஷ்ய ட்ரோன்கள் ருமேனிய வான்வெளியில் பறந்த நிலையிலேயே ரஷ்யாவின் டாகன்ரோ பகுதி மீதான தாக்குதல் நடந்தது.

இதனிடையே, ஐரோப்பாவின் சமாதான ஒப்பந்தத்தை ஏற்க முடியாது என புடின் மறுத்த நிலையில், உக்ரைன் தலைநகர் மீது மிகக் கொடூரமானத் தாக்குதலை ரஷ்யா முன்னெடுத்தது.

அண்டை நாடான ருமேனியாவும் ரஷ்ய ட்ரோன் தாக்குதலுக்கு இலக்கானது. இந்த நிலையிலேயே, ஜெனீவாவில் அமெரிக்காவிற்கும் உக்ரைனுக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து அபுதாபியில் அமைதி நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் வகையில் இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை என்ற முடிவை எடுத்தனர்.

டிரிஸ்கோலும் ரஷ்ய தரப்பும் கடந்த திங்கள் கிழமை இரவு பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினர். விரைவில் உக்ரைனின் புடனோவை டிரிஸ்கோல் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷ்யாவால் மிகவும் தேடப்படும் நபர்களில் ஒருவர் இந்த கைரிலோ புடனோவ்.

வெளிவரும் தகவல்களின் அடிப்படையில், அமெரிக்கா, ரஷ்யா மற்றும் உக்ரைன் அதிகாரிகள் ஒரே நேரத்தில் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது இதுவே முதல் முறை என கூறப்படுகிறது.

# இராணுவத்தில் இளைஞர்களை சேர்ப்பது குறித்த பிரான்ஸ் ஜனாதிபதி மேக்ரானின் கருத்தால் சர்ச்சை



இராணுவத்தில் இளைஞர்களை சேர்ப்பது குறித்த பிரான்ஸ் ஜனாதிபதியின் கருத்தைத் தொடர்ந்து சர்ச்சை ஒன்று உருவாகியுள்ளது.

ரஷ்யா உக்ரைனை ஊடுருவியதிலிருந்தே பல ஐரோப்பிய நாடுகள் தங்கள் இராணுவத்தை வலுப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றன.

பிரான்ஸும் அதேபோல இராணுவத்தை பலப்படுத்தவேண்டும் என பிரான்ஸ் ஜனாதிபதியான இமானுவல் மேக்ரான் விரும்புகிறார்.

சமீபத்தில் அவர் இராணுவத்தில் இளைஞர்கள் தானே முன்வந்து சேரும் திட்டம் குறித்து பேசியிருந்தார்.

அதைத்தொடர்ந்து, இராணுவ ஜெனரலான ஃபேபியன் என்பவர், நம் நாடு ரஷ்ய போரில் ஈடுபடுவதற்காக நமது இளைஞர்களை உக்ரைனுக்கு அனுப்பினால் நாம் நம் பிள்ளைகளை இழக்க நேரிடும் என்று கூறியதால், பதற்றமான ஒரு சூழல் உருவானது.

இந்நிலையில், தனது உரைக்கு விளக்கம் அளித்துள்ளார் மேக்ரான். இளைஞர்கள் இராணுவத்தில் சேருவது குறித்து தான் பேசிய விடயம் ரஷ்யப் போர் தொடர்பிலானதல்ல என்று கூறியுள்ளார்.

இந்த புதிய இராணுவ திட்டம், நம் இளைஞர்களை உக்ரைனுக்கு அனுப்புவது தொடர்பிலானது அல்ல, மக்கள் அது குறித்து குழப்பம் அடையவேண்டாம் என்று மேக்ரான் கூறியுள்ளார்.

கனடா முரசு

புதன்கிழமை 26/11/2025

## யோகட் பானம் குறித்து கனடாவில் எச்சரிக்கை




C3▶




# இந்தியாவிற்கு 2.8 பில்லியன் டொலர் மதிப்பில் யூரேனியத்தை வழங்குவதற்கு கனடா ஒப்பந்தம்

இந்திய அணு நிலையங்களுக்கு கனடா 2.8 பில்லியன் மதிப்பிலான யூரேனியம் வழங்கவுள்ளது.

இந்தியா மற்றும் கனடா இடையே, அணுமின் நிலையங்களுக்கு யூரேனியம் வழங்கும் நீண்டகால ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாக உள்ளது.

இந்த ஒப்பந்தம், இரு நாடுகளுக்கிடையிலான Comprehensive Economic Partnership Agreement (CEPA) பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு முன்னேற்றம் கண்டுள்ளது.

கடந்த வாரம் ஜொஹான்ஸ்பர்கில் நடைபெற்ற ஜி 20 உச்சி மாநாட்டின் போது, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் கனடா பிரதமர் மார்க் கார்னி சந்தித்து, இரு நாடுகளின் civil nuclear cooperation உறவை வலுப்படுத்தியுள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தின் படி, கனடாவின் Saskatchewan மாநிலத்தில் அமைந்த Cameco Inc நிறுவனம், இந்திய அணு மின் நிலையங்களுக்கு யூரேனியம் வழங்கும்.

C2▶





# மீண்டும் அமெரிக்காவுக்கு விஜயம் செய்கிறார் கார்னி

கனடிய பிரதமர் மார்க் கார்னி மீண்டும் அமெரிக்கா விஜயம் செய்ய திட்டமிட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

தென் ஆபிரிக்காவில் நடந்த ஜீ20 மாநாட்டின் நிறைவின் செய்தியாளர் சந்திப்பில், ட்ரம்புடன் அண்மையில் தொடர்பு கொண்டீர்களா என ஊடகவியலாளர்கள் கார்னிடம் கேள்வி எழுப்பியிருந்தனர்.

அதற்கான அவசியம் என்ன என கார்னி பதில் கேள்வி எழுப்பியுள்ளார். அது ஒரு சிறிய விபரம். நான் அவருடன் பேசினேன். தேவையான நேரத்தில் மீண்டும் பேசுவேன் என தெரிவித்துள்ளார். இப்போது அவசரமாக பேச வேண்டிய விஷயம் இல்லை.

அமெரிக்கா வணிக விவாதங்களுக்கு திரும்ப விரும்பும்போது நாம் பேசுவோம் என குறிப்பிட்டுள்ளார்.

கார்னி அடுத்த வாரம் அமெரிக்க தலைநகருக்கு சென்றால், ஏப்ரல் தேர்தலுக்குப் பிறகு அவர் அமெரிக்கா பயணம் செய்யும் மூன்றாவது பயணமாகும்.

நீடித்து வரும் கனடா – அமெரிக்க வர்த்தகப் போரின் மத்தியில் பயணம் நடைபெறுகிறது.

தென் ஆபிரிக்காவில் கார்னில் வேலையிழப்பு தொடர்பில் வெளியிட்ட கருத்துக்கு எதிர்க்கட்சிகள் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

# கனடா அரசாங்கத்தினால் முன்வைக்கப்படும் எல்லைப் பாதுகாப்பு சட்டமூலத்திற்கு எதிர்ப்பு

கனடாவின் மத்திய அரசாங்கத்தினால் முன்வைக்கப்படும் எல்லைப் பாதுகாப்பு சட்ட மூலத்திற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

எல்லை பாதுகாப்பு சட்டமூலம் சீ 12, குடியேற்றக்காரர்களின் உரிமைகளை மீறும் அபாயம் உள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதை உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என்றும் பல குடியேற்ற உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.



குடியேறிகள் உரிமைக்ள வலையமைப்பு, கனடிய அகதிகள் பேரவை உள்ளிட்ட பல அமைப்புகள், இந்த சட்ட மூலத்தை விமர்சனம் செய்துள்ளன.

இந்த சட்ட மூலத்தை ஆய்வு செய்யும் குழுக்களில் சாட்சிகளாக சேர்க்கப்படாததால், இந்த அமைப்புகள் செய்தியாளர் சந்திப்பினை நடத்தி எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

இந்த சீ-12 சட்ட மூலம் ஒன்பது சட்டங்களின் திருத்தங்களை கொண்டுள்ளது எனவும் 70 பக்கங்கள் உள்ளதாகவும் இதனை மூன்று வாரங்களில் ஆய்வு செய்ய முடியாது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

**இந்தியாவிற்கு...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

Cameco- 2015 இல் இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்து 2020 வரை யூரேனியம் வழங்கியது. அந்த ஒப்பந்தம் முடிவடைந்த நிலையில், புதிய ஒப்பந்தம் 10 ஆண்டுகள் வரை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவுக்கு யூரேனியம் வழங்குவதற்கான அனுமதி, 2013 இல் அமலுக்கு வந்த Canada-India Nuclear Cooperation Agreement மூலம் கிடைத்தது. தற்போது, இந்தியா சிறிய அழனரடயச சநயஉவழசள தொடர்பிலும் ஆர்வம் காட்டி வருகிறது.

மேலும், இந்த ஒப்பந்தம், சமீபத்தில் அறிவிக்கப்பட்ட Australia-Canada-India Technology and Innovation (ACITI) Partnership உடன் இணைந்து, சுத்தமான எரிசக்தி, emerging technologies, ஏ.ஐ. போன்ற துறைகளில் மூன்று நாடுகளின் ஒத்துழைப்பை வலுப்படுத்தும்.

இந்த 2.8 பில்லியன் டொலர் யூரேனியம் ஒப்பந்தம், இந்தியாவின் அணு மின் உற்பத்தி திறனை அதிகரிக்கவும், சுத்தமான எரிசக்தி பயன்பாட்டை விரிவுபடுத்தவும் முக்கிய பங்காற்றும் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

# கனடாவில் பாரிய தீ விபத்தில் பலி எண்ண்ணிக்கை 5 ஆக உயர்வு





கனடாவின் பிராம்டனில் இடம்பெற்ற தீ விபத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 5 ஆக உயர்வடைந்துள்ளது.

துயரகரமான வீட்டு தீ விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வரும், கருவில் இருந்த ஒரு சிசுவும் உயிரிழந்துள்ளதாக உறவினர் ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

மக்லஃப்ளின் மற்றும் ரிமெம்ப்ரன்ஸ் வீதிகளுக்கு அருகிலுள்ள இந்த வீட்டில் மொத்தமாக 12 பேர் வசித்தனர் என பீல் பிராந்தியப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதில் 10 பேர் பல தலைமுறை ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கீழ்தளத்தில் வசித்த இரண்டு வாடகையாளர்கள் காயமின்றி உயிர் தப்பினர்.

சம்பவ இடத்திலேயே இருவர் உயிரிழந்தனர், நான்கு பேர் இரண்டாவது மாடியிலிருந்து குதித்து தப்பினர் இவர்கள் அனைவரும் தீவிர காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

5 வயது சிறுவன் மற்றும் மேலும் இருவர் தற்போது குணமடைந்துள்ளர் எனவும் இன்னொருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளிக்கிழமை இடிபாடுகளில் மூன்றாவது உடல் கண்டெடுக்கப்பட்டது, காணாமல் போனோரில் ஒருவர் குழந்தை என நம்பப்படுகிறது.

தீயில் வீட்டு பொருள்கள் முழுவதும் அழிந்துவிட்டன. ஆடைகள், கடவுச்சீட்டுகள், ஆவணங்கள் மற்றும் அனைத்தும் கருகி நாசமாகிவிட்டன என தெரிவிக்கப்படுகின்றது.

# யோகட் பானம் குறித்து கனடாவில் எச்சரிக்கை

கனடாவில் பிரபல யோகட் பானமான யோப்லாயிட் யோப் தயாரிப்புகள் சிலவற்றில், பிளாஸ்டிக் துண்டுகள் கலந்திருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் பேரில், கனடிய உணவு ஆய்வு அமைப்பு திரும்ப் பெறும் உத்தரவினை பிறப்பித்துள்ளது.

பேக்கேஜ் கூறுகளில் உள்ள குறைபாட்டால் தயாரிப்பில் பிளாஸ்டிக் கலக்க வாய்ப்பு இருப்பதால் முன்னெச்சரிக்கையாக இந்த சுய விருப்ப அடிப்படையிலான மீளப் பெறல் மேற்கொள்ளப் படுவதாக நிறுவனம் அறிவித்துள்ளது.




200 மில்லி லீற்றர் அளவு கொண்ட புளூபெரி, ஸ்ட்ரோபெரி, ஸ்ட்ரோபெரி–வாழை, பர்த்டே கேக், வனில்லா, வாழை, ராஸ்ப்பெரி, பீச், மந்தரின்,ட்ராபிக்கல், பிளாக்பெரி – ஸ்டார்ஃப்ரூட், லாக்டோஸ் ஃப்ரீ ஸ்ட்ரோபெரி – ராஸ்ப்பெரி, லாக்டோஸ் ஃப்ரீ மாம்பழம் போன்ற பானங்கள் இவ்வாறு மீளப்பெறப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பான வகைகளினால் இது வரையில் யாருக்கும் உடல் நலப் பிரச்சினைகள் எற்பட்டதாக தெரியவரவில்லை எனவும் எச்சரிக்கை அடிப்படையில் பானங்கள் மீளப் பெற்றுக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.